(Under Section 173 BNSS)

(பா.கு.பா.ச பிரிவு 173 இன் கீழ்) **FIRST INFORMATION REPORT**

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8082934

C

1. District : மாவட்டம் Virudhunagar PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2026 FIR No.: முத.அ. எண் 08/2026 Date: நாள் 01.10.2026

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 01.10.2026 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 12.15 hrs Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.10.2026 Time : நேரம் 14.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 01.10.2026 Time : நேரம் 14.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக In Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 22 Kms / South

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி அருப்புக்கோட்டை, காந்திநகர் பிள்ளையார் கோவில் அருகிலுள்ள டீக்கடையில் வைத்து.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.இரா.சேகர் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.இராமகிருஷ்ணன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 18.05.1974 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி 970, காந்தி நகர், திருச்சுழி மெயின் ரோடு, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1.திரு.மாரிமுத்து, போர்மேன், தமிழ்நாடு மின்சார வாரியம், பெத்தம்மாள்கோவில் அருகில், ஆத்திப்பட்டி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் மற்றும் வணிக உதவியாளர் (CA).

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
- தாமதம் இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) Not arise
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. Reasons for delay in reporting by the complainant / informant (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

நான் இன்று 01.10.2026 பிற்பகல் 14.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, திருச்சுழி மெயின்ரோடு, காந்திநகர், கதவு எண்.970 என்கிற முகவரியைச் சேர்ந்த திரு.இராமகிருஷ்ணன் என்பவரின் மகன் திரு.சேகர் என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகார்மனுவை பெற்று அதை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார்மனு தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், வாதிமீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், எதிரிகள்மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 01.10.2026 பிற்பகல் 14.40 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரிகள் 1) திரு.மாரிமுத்து, போர்மேன், தமிழ்நாடு மின்சார வாரியம், பெத்தம்மாள்கோவில் அருகில், ஆத்திப்பட்டி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் மற்றும் 2) வணிக உதவியாளர் (CA). என்பவர்கள் மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/2026 சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன்படி /தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

1/10/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Insp / VBAC / VNR.

15. Date & Time of despatch to the court.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

**விருதுநகர் மாவட்ட ஊ.த.க.பிரிவு குற்ற எண்.08/2026 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.இரா.சேகர் அவர்களின் புகார் மனு விபரம் பின்வருமாறு. அனுப்புநர் இரா.சேகர், 52/2026, த/பெ.இராமகிருஷ்ணன், கதவு எண்.970, காந்தி நகர், திருச்சுழி ரோடு, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக ஆத்திப்பட்டி ஆவுடையம்மாள் நகரிலுள்ள இடத்தில் புதிய வீடு கட்ட உள்ளேன். மேற்படி இடத்திற்கு தற்காலிக மின்இணைப்பு பெறுவதற்கு முறைப்படி இ-சேவை மையத்தில் விண்ணப்பம் செய்து, அதற்குரிய கட்டணத்தை கடந்த 21.09.2026 அன்று இ-சேவை மையம் வழியாக கட்டிவிட்டேன். இந்நிலையில் ஆத்திப்பட்டி பெத்தம்மா கோவில் அருகிலுள்ள தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்தில் போர்மேனாக பணிபுரியும் திரு.மாரிமுத்து என்பவர் என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, உங்களுடைய தற்காலிக மின்இணைப்பிற்கு மீட்டர் பெட்டி அலார்ட்டாகிவிட்டது, நீங்கள் நேரில் வந்து பாருங்கள் என்று கூறினார். ஆகையால், நான் இன்று (01.10.2026) மதியம் சுமார் 12.00 மணியளவில் ஆத்திப்பட்டி பெத்தம்மா கோவில் அருகிலுள்ள தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்தில் போர்மேனாக பணிபுரியும் திரு.மாரிமுத்து என்பவரை பார்த்தபோது, அவர் அலுவலகத்தில் இல்லை. எனவே அவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது, அருப்புக்கோட்டை காந்திநகர், பிள்ளையார் கோவில் அருகிலுள்ள டீக்கடையில் இருப்பதாக கூறி, அங்கு வரச்சொன்னார். நான் அங்கு மதியம் சுமார் 12.15 மணியளவில் சென்று பார்த்து, என்னுடைய தற்காலிக மின்இணைப்பு மீட்டர் பெட்டி சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர் எல்லாம் ரெடியாகிவிட்டது, அலுவலக செலவிற்கு ரூ.1,500/- பணம் தரவேண்டும் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம், அவ்வளவு பணமா சார், யார் யாருக்கு என்று கேட்டேன். அதற்கு அவர் அருகிலுள்ள ஒருவரை அறிமுகப்படுத்தி, இவர் CA என்று கூறினார். அப்போது அவரும், இது அலுவலக செலவுக்காக எல்லோரும் கொடுக்கிறதுதான், இதுல யோசிக்காதீங்க, நீங்க இந்த ரூ.1,500/- பணத்தை எங்களிடம் கொடுத்தால்தான் உங்களுக்குரிய மீட்டர் பெட்டியை மாட்டுவதற்கு நடவடிக்கை எடுப்போம், எங்கள் இருவருக்கும்தான் அந்த பணம் என்று இருவரும் கூறினார்கள். அதற்கு நான் அவர்களிடம், தற்போது என்னிடம் பணம் இல்லை என்று கூறினேன். உடனே போர்மேன், அந்த ரூ.1,500/- பணத்தை இன்னைக்கே (01.10.2026) ரெடி பண்ணிட்டு, சாயந்திரம் எனக்கு போன் பண்ணுங்க, நான் என்னான்னு சொல்றேன், அதுக்கு பிறகுதான் மீட்டர் பெட்டியை மாட்டுவதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று கூறினார். நானும் வேறுவழியில்லாமல் சரியென்று சொல்லிவிட்டு, வீட்டிற்கு வந்து யோசனை செய்து பார்த்ததில், அவர் நியாயமாக செய்ய வேண்டிய அரசு வேலைக்கு நாம ஏன் அவர்களுக்கு லஞ்சம் தரணும் என்று லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாமல் இன்று (01.10.2026) மதியம் 02.30 மணிக்கு விருதுநகர் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு வந்து,

என்னுடைய பெயரில் வழங்கிய தற்காலிக மின்இணைப்பிற்குரிய மீட்டர் பெட்டியை மாட்ட நடவடிக்கை எடுப்பதற்கு என்னிடம் லஞ்சப்பணமாக ரூ.1,500/- கேட்ட அருப்புக்கோட்டை, ஆத்திப்பட்டி பெத்தம்மா கோவில் அருகிலுள்ள தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்தில் கள்உதவியாளராக பணிபுரியும் திரு.மாரிமுத்து மற்றும் CA ஆகியோர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். (sd) Sekar. 1/10/2026 Sir, Received the complaint on 01.10.2026 at 14.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR. DVAC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.8/2026 u/s 7 of the PC Act 1988 as amended in 2018 on 01.10.2026 at 14.40 hrs and took up for investigation. (Sd) (S.JASMINE MUMTAJ) 1/10/2026 Insp/V&AC/VNR.

The original FIR along with original complaint is submitted to the court of the Principal District and Sessions Judge cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.

Insp/V&AC/VNR.